செ.வெ.எண்: 391/2019 நாள்: 19.8.2019

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 542 மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (19.8.2019) பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் பொது மக்களிடமிருந்தும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பெற்றுக் கொண்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக்கடனுதவி, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி 542 மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டார். மேலும், நிலுவையிலுள்ள மனுக்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை திட்டத்தின் கீழ் போளுர் வட்டம் சேதாரம்பட்டு கிராமத்தை சேர்ந்த சதாசிவம் என்பவருக்கு ரூ.1000/-த்துக்கான மாதாந்திர உதவித் தொகைக்கான ஆணை மற்றும் திருமதி.மோகனா என்பவருக்கு ஆதாரவற்ற விதவைக்கான உதவித்தொகை பெறுவதற்கான ஆணையும் மற்றும் சித்தாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் விற்பனையாளராக பணிபுரிந்து உடல்தகுதியின்மை காரணமாக பணிஓய்வு பெற்ற திரு.வி.ஜெயசந்திரன் என்பவரது மகன் செல்வன்.ஜெ.சுதேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனத்துக்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 19.08.2019 இன்று 3 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு மடக்கு சக்கர நாற்காலி ரூ.5910/- மதிப்பிலும், 1 மாற்றுத்திறனளி நபருக்கு மூன்று சக்கர சைக்கிள் ரூ.7240/- மதிப்பிலும், 5 மாற்றுத்திறனாளி நபருக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூ.12500/- மதிப்பிலும், 1 மாற்றுத்திறனாளி நபருக்கு பட்டம் மற்றும் பட்டயம் பயின்ற மாற்றுத்திறனாளி நபருக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.25000/- காசோலை மதிப்பிலும், 22 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு திருமண நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டது ஆகமொத்தம் 32 நபர்களுக்கு ஆக மொத்தம் ரூ.112470/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.சு.கந்தசாமி,இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது.

முன்னதாக பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2019 பணியின் போது (03.04.2019) அன்று சாலைவிபத்தில் இறந்த ஜமுனாமத்தூர் குறுவட்ட நில அளவர் திரு.காளி(லேட்) என்பவருக்கு தேர்தல் பணியின் போது உயிரிழந்ததற்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட ரூ.15,00,000/-ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம்) பெறுவதற்கான ஆணையினை இறந்தவரின் வாரிசான அவரது மனைவி திருமதி.சந்தியா என்பவரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பொ.ரத்தினசாமி தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் திரு.வில்சன் ராஜசேகர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி பரிமளா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி.லாவண்யா, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சு.சரவணன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**